Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 10 புதன்கிழமை (24.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 156

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறும்

## நோர்வே நம்பிக்கை

(கிளிநொச்சி)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முன்னர் இடம் பெற்றதைப் போன்று தொடர்ந்தும் நடைபெறும் என தான் நம்புவதாக இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் தெரிவித்துள்ளார்.


இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் நேற்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையிலேயே பிறட்ஸ்கர் இவ்வாறு கூறினார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுக்காயத்துடன் மல்லாகத்தில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பழைய நீதிமன்ற வீதியில் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் அதே இடத்தைச்சேர்ந்த சிவஞானம் சஞ்சீவன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது கொலைக்குரிய காரணம் எதுவும் கண்டறியப்படவில்லை என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை இவரது சடலம் நேற்று இவரது சகோதரனிடம் கையளிக்கப்பட்டது. (ச-132,133)



தமிழீழ விடுதலைப்புலிகளை இலங்கைக்கான நேர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் காலை 9மணிக்கு இச் சந்திப்பு நடைபெற்றது. விடுதலைப்புலிகளின் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்,காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ,சமாதான செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

## இராணுவ உயர்மட்ட அதிகாரிகளுக்கு ஆயுதக்குழுவுடன் தொடர்பு இல்லை

### அரச சமாதான செயலகப்பணிப்பாளர் தகவல்



(கொழும்பு)

இராணுவத்தின் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் சில வேளை விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஆயுதக்குழுக்களுடன் ஏதேனும் தொடர்புகளை வைத்திருக்கக்கூடும். ஆனால் உயர் மட்ட உறவுகள் இருப்பதற்கான சான் றுகள் எதுவும் கிடையாது என்று அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பாலித கோகன்ன தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு வழங் கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரி வித்தார். இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகள் கருணா குழுவுடனான தொடர்புகளை ஊக்குவிப்பதில்லை.உதவிகள் செய்வதும் இல்லை.

மிகவும் கீழ்மட்டத்தினரிடையே,மூன்று (08 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விருப்பம்

### தமிழ்ச்செல்வனிடம் மதகுருமார் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை தென்னிலங்கையின் பௌத்த ,கத்தோலிக்க மதத்தலைவர்கள் நேற்று கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று காலை 11 மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

போர்' ஏற்படுவதைத் தவிர்த்து அமைதி முயற்சிகளில் ஈடுபட தமிழீழ விடுதலைப்புலிகளையும் அரசாங்கத்தையும் வலியுறுத்தப் போவதாகவும் இதன் அடிப்படையில் நேற்றைய சந்திப்பில் தாம் கலந்துரையாடியதாகவும் தென்னிலங்கை மதத்தலைவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் ஜனாதிபதி ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடிய செய்தியை சு.ப. தமிழ்ச்செல்வனிடம் தெளிவுபடுத்தியதாக அவர்கள் தெரிவித்தனர்.

இனப்பிரச்சினை தீர்வுக்காக தான் தொடர்ந்தும் விரும்புவதாகவும் இது தொடர்பாக தான் தேர்தல் காலங்களில் கூறியதுபோன்றே விடுதலைப்புலிகளின் (08 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணி படுகொலை வழக்கு பிரேத அறிக்கை சமர்ப்பிப்பு

செம்மணி ,15 பேர் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டதாக கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு குற்றப்புலனாய்வுப்பிரிவு தெரிவித்துள்ளது.

1998-ம் ஆண்டு மே மாதம் 21-ம் திகதி செம்மணியில் 15 பேர் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டது தொடர்பாகவே பிரேத பரிசோதனை நடத்தப்பட்டதாக நீதிமன்றத்திற்கு குற்றப்புலனாய்வுப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்று விசாரணைகளை துரிதமாக மேற்கொண்டு சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடருமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

செம்மணிச் சம்பவம் தொடர்பாக எதிர்வரும் ஓகஸ்ட் 31ம் திகதியன்று மேலதிக அறிக்கையொன்றை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.(ச-5)

உள்ளே
தரம் -5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்

... நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்று ஒரு தகவல்

# நிறைவு

ஒரு ஊரில் ஒரு மகாராஜா இருந்தார். மிகவும நல்லவர். தர்மசிந்தனை உள்ளவர் எல்லோருக்கும் எல்லா உதவியும் செய்வார். யாருக்கும் இல்லை என்று சொல்லமாட்டார்.

ஒரு சமயம் அவர் ஒரு பெரிய காட்சிச்சாலையைத் திறந்து வைத்தார். அதில் ஏகப்பட்ட பொருட்கள் இருந்தன. எல்லாம் இலவசமாகக் கொடுப்பதற்காக யார் வேண்டுமானாலும் வரலாம் எந்தப் பொருளை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு போகலாம். காசு கிடையாது . ஆண், பெண் எல்லோரும் வந்து அவரவர் விருப்பப்படி அவர்களுக்கு பிடித்தவற்றை எடுத்துக்கொண்டு போகலாம்.

இந்தக் காட்சிச்சாலைக்கு நிறையப் பேர் வந்தார்கள் தமக்கு தேவையானவற்றை எடுத்துக் கொணடு போனார்கள் சிலர் அவர்களுக்குத் தேவையான வேட்டி சட்டைகளை எடுத்துக் கொண்டு போனார்கள சிலர்அங்கிருந்த விலை உயர்ந்த நகைகளை எடுததுக்கொண்டு போனார்கள். சிலர் அங்கிருந்த நல்ல புத்தகங்களை எடுத்துக்கொண்டு போனார்கள். சில பேர் இரும்புப் பெட்டிகளை எடுத்துக்கொண்டு போனாாகள. சிலர் நல்ல பழ வகைகளை எடுத்துக் கொண்டார்கள். எல்லோருக்கும் முழுமன நிறைவு நிறைவுடன் திரும்பிப் போனார்கள்.

ஒரே ஒரு வயதான அம்மா.... தனியாக அங்கே வந்தார். ஆனால் எதையும் தொடவில்லை. மன நிறைவு இல்லை எல்லோரும் ஆச்சரியமாக அவரைப்பார்த்தார்கள். ஊர் மக்கள் எல்லோருக்கும் மன நிறைவு... இவருக்கு மட்டும் மன நிறைவு இல்லையா? என்ன காரணமாக இருக்கும் உங்களுககுப் பிடித்ததை எடுத்துக்கொள்ள வேண்டியது தானே... என்றார்கள் " இங்கே இருக்கம எந்தப பொருளும எனக்குத் திருப்தி அளிக்கவில்லை நான் மகாராஜாவைப் பார்க்க வேண்டும்'' என்றார்கள்.

அங்கே இருந்த திவான் ஓடிப் போய் மகாராஜாவிடம சொன்னார். உடனே மகாராஜா ஒரு யானை மீதேறி அந்த அம்மாவைப் பார்கக வந்து விட்டார். அந்த அம்மா மன்னரைப்பார்த்து மகாராஜா கீழே இறங்கி வாருங்கள். ஒரு முக்கியமான விடயம் பற்றி உங்களிடம் பேசவேண்டும் என்றார்.

அரசர் யானையிலிருந்து கீழே இறங்கினாா. அந்த அம்மா ராஜாவின் வலது கையைப் பிடித்துக் கொண்டு மகாராஜா இப்போது நீங்கள் எனக்கு சொந்தமாகிவிட்டீர்கள். காட்சிச்சாலையில் உள்ள சின்னச்சின்னப் பொருட்களையும்... விளையாட்டுப் பொம்மைகளையும் நான் விரும்பவில்லை. உங்களைப் பெறவே நான் விரும்புகிறேன். நீங்கள் எனக்குச் செந்தமாகி விட்டதனால் இந்த ராஜ்யத்தின் செல்வம் இப்போது எனக்குச் சொந்தமாகி விடடது என்றார்.

மகாராஜா மலைத்துப் போய் நின்றார். அந்த அம்மாவை கடைசி வரைக்கும் தன் அரண்மனையி லேயே வைத்து தாய் மாதிரி கவனித்துக் கொண்டார்.

நமக்குப் பலவிதமான ஆசைகள். அதனால் அந்தந்த ஆசைக்குரிய பொருட்களைத் தேடிச் செலகிறோம். இப்படிச் செய்வதனால் திருப்தி உணடாவ தில்லை. ஆசைக்கு அடிமையாகுபவர்கள் பிச்சைக்காரர்களுக்கும் பிச்சைக்காரர்களாகி விடுகிறார்கள். உலக இச்சைகளையும் பொருள்களையும் துறந்து இப்பரந்த பிரபஞ்சத்தின் மூலம் பரம பொருளைப் பெற்று விட்டால் உங்களுடைய எல்லா ஆசைகளும் பு்ர்த்தியாகி விடும் என்கிறார் சுவாமி சிவானந்தர்.

எப்படி ஞானமுள்ள அந்த வயதான அம்மா மகாராஜாவைச் சொந்தமாகப் பாராட்டி அவருடைய செல்வத்துக்கெல்லாம் அதிபதியாக ஆனார்களோ அப்படியே எல்லா சவுகரியங்களும் உங்களைத் தேடி வரும் என்கிறார் அவர். இந்தக் காலத்திலெல்லாம் அது போன்றவர்களைப் பார்ப்பது மிக அபூர்வம் .

ஒரு நண்பரைப் ப்ார்த்துக் கேட்டேன் . ஏன்சார்.... அந்த மகாராஜா ம்ாதிரியே இப்போது ஒருவர் தனனுடைய பங்களாவுக்கு உங்களைக் கூப்பிட்டு எதை வேண்டுமானலும் எடுத்துக்கொண்டு போ என்று சொன்னால் முதலில் எதை எடுப்பீர்கள்? என்று கேட்டேன்.

முதலில் அவரைத்தான் எடுப்பேன் அவரை எடுத்துக் கொண்டு போய் எங்காவது காட்டில் விட்டு விட்டு வந்து அதன் பின்பு அந்த பங்களாவில் நான இருப்பேன்'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நாளை மறுதினம் கொழும்பு வருகிறார் எரிக் சொல்ஹெய்ம்

(கொழும்பு)

போர்அபாயத்திற்குள் சிக்கியுள்ள இலங்கையில் அமைதி முயற்சிகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்த முக்கிய சந்திப்புக்களை மேற்கொள்வதற்கு நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கொழும்பு வரவுள்ளார்.

விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியல்களில் சேர்த்து அதனை தடைசெய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ள உத்தேச தீர்மானம் அரச படைகளின் பின்னணியுடன் தமிழர் தரப்பின் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைப் படலத்தின் ஒரு அங்கமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட துணை இராணுவத்தளபதி ரமணன் படுகொலை ஆகியவை விடுதலைப்புலிகளை கடும் சீற்றத்துக்கு உள்ளாக்கியிருப்பதுடன் இனிமேலும் பொறுமை காக்க முடியாது என்ற கட்டத்திற்கு கொண்டு வந்து விட்டபடியால் இலங்கையில் எந்நேரமும் போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்கருத்து வெளியிடுகையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராஜதந்திர நடவடிக்கைகள் இலங்கையில் போர் மேகங்களை கருக்கொள்ளவைத்து வருகின்றன என்று கூறியிருந்தார்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்செல்வன் கூறுகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தமக்கெதிரான நகர்வு தென்னிலங்கையில் உள்ள யுத்த விரும்பிகளுக்கு ஊக்க மாத்திரையாகஅமையும் என்று கூறினார்.

ஆனால் முழு உலகமும் தடை செய்தாலும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த தாம் தயார் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை விடுதலைப்புலிகளைபேச்சு மேசையைவிட்டு அகலாமல் செய்ய உதவும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஹெகலிய ரம்புக் வெல கூறியிருந்தார்.

எது எப்படி இருப்பினும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தடை ஐரோப்பியஒன்றியத்தினால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டால் கண்காணிப்புக்குழுவில் அங்கம்வகிக்கும் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளை விடுதலைப்புலிகள் வெளியேறக் கோருவர். அவ்வாறான ஒரு நிலையில் அனுசரணையாளர்களான நோர்வே தனிமைப்படும் அதற்கு அப்பால் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு எந்த சாத்திய நிலையும் இருக்காது. நாடு யுத்தத்திற்குள் தள்ளப்படுமென்று கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறான பல சிக்கல்கள் நிறைந்த நிலைமையை எவ்வாறு சமாளிக்கலாம் என்பது குறித்து முக்கிய மந்திராலோசனை நடத்துவதற்கு சொல்ஹெய்ம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொழும்பு வருகைதரவுள்ளார். (க)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, வவுனியா போன்றபயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன .

6 மாத முழுநேரப் பயிற்சி நெறிக்கு, ஜீ.சீ.ஈ.(சா/த) இல் ஆங்கிலம் கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரணசித்தி பெற்றிருப்போர் ஏனைய 4 பாடங்களில் திறமைச்சித்தியை பெற்றிருக்க வேண்டும்.

அல்லது ஆங்திலம் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைசித்தியும் இரு தடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியும் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது கா.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதேனும் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் விண்ணப்பதாரி விண்ணப்பமுடிவுத்திகதியன்று 16-35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாகாணப்பணிப்பாளர் NAITA, இல. 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு 09 06.2006 க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

# சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான எழுத்து செயன்முறைப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் திகதி வழங்கப்பட்டு நடாத்தப்படாத சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்து மற்றும் செயன் முறைப் பரீட்சைகள் புதியதிகதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளது என யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் பத்மநாதன் அறிவித்துள்ளார்.

இதன்படி கடந்த 9,10 ஆம் திகதிகளில் நடைபெற விருந்த சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சை முறையே எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளிலும் 11, 16, 17ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த பரீட்சை யூன் மாதம் 2 ஆம், 5 ஆம் திகதிகளிலும் 19ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை இம்மாதம் 31 ஆம் திகதியும் நடைபெறும்

இப்பரீட்சை நடைபெறும் நேர விபரத்தில் இம் மாதம் ம31 ஆம் திகதி நடைபெறவுள்ள பரீட்சை யும்

யூன் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பரீட்சையும் மு.ப. 11 மணிக்கு நேர மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சை ஏற்கனவே நடைபெறவிருந்த நேரப்படியே ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயல் முறைப்பரீட்சையில் கடந்த 3, 4, 5, 6, 8, 10ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயல் முறைப் பரீட்சை முறையே 29, 31, 1, 2, 2, 3ஆம் திகதிகளில் நடைபெறும் 29, 31 , 1, 2 ஆம் திகதிகளில் பி.ப 2 மணிக்கும் 3 ஆம் திகதி மு. ப 9 மணிக்கும் பரீட்சைகள் ஆரம்பமாகும். (க)

# ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கவுள்ள தடையை பொறுத்தே அடுத்தகட்ட நகர்வு

## இப்படிக்கூறுகிறார் பௌயர்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளுக்கு தடை விதிக்கும் பட்சத்தில் அதை இலங்கை அரசாங்கமும் விடுதலை ப்புலிகளும் எவ்வாறு எடுத்துக் கொள்ளப் போகிறார்கள் என்பதைப் பொறுத்தே இலங்கையின் சமாதான முயற்சிகளின் அடுத்த கட்ட நகர்வு இருக்கும் என்று நேர்வேயின் சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவில் ஒளிபரப்பாகும் தமிழ்த் தொலைக்காட்சி இணையமான ரி ரி என்னுக்கு தகவல் தெரிவிக் கையிலேயே அவர் இதனை தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வார இறுதியில் நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்முடன் இலங்கைக்குச் செல்லவுள்ளேன். கிளிநொச்சிக்கும்சென்றுதற்போதுள்ள சூழ்நிலை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் கலந்துரையாடவுள்ளேன்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட்ட முக்கிய அரசியல் தலைவர்களை எரிக் சொல் ஹெய்ம் சந்தித்துப் பேசுவார். இம்முறை அவர் வன் னிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை சந்திக்கமாட்டார் என்று குறிப்பிட்ட பௌயர் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் உலப் ஹென்றிக்சன் நோர்வேக்கு வந்திருப்பதை உறுதிப்படுத்தினார்.

நோர்வே அரசின் அவசர அழைப்பின் பேரிலேயே அவர் அங்கு வந்தாக வெளிவ ந்த செய்திகளை மறுத்தார். இலங்கையின் கள நிலவரம் குறித்து ஆறு மாத காலத்துக்கு ஒரு தடவை கூடி ஆராயும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழமையானஒரு சந்திப்பாகவே உலப் ஹென்றிக்சன் நோர்வேக்கு வந்தார் என்று ஜோன் ஹன்சன் பௌயர் கூறினார். (க)

# தற்காப்பு பயிற்சி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப்பிரதேசத்தில் ஒன்பதாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் தற்காப்புப் பயிற்சியில் ஈடுபட்டு வருவதாக தெரிகிறது.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கடந்த புதன் கிழமை ஆரம்பமான பயிற்சி நிகழ்வுகள் 25 பயிற்சிப் பாசறைகளில் நாள் தோறும் நடைபெற்று வருகின்றன.

புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதிகளில் பயிற்சி ஆசிரியர் குயிலனும், வள்ளிபுனம், தேவிபுரம் பகுதிகளில் பயிற்சி ஆசிரியர் நளினரூபனும் இரணைப் பாலைப்பகுதியில், பயிற்சி ஆசிரியர் சாந்தனும் மந்துவில் ஆனந்த புரம்பகுதிகளில் பயிற்சி ஆசிரியர் ரங்கனும் பயிற்சிகளைவழங்கி வருகின்றனர். நாள் தோறும் நடைபெற்று வருகின்ற பயிற்சி நிகழ்வுகளில் ஒன்பதினாயிரத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டு பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் காலை நடைபெற்ற நிகழ்வுகளில் மந்துவில் அரசரத்தினம் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ நீதி நிர்வாகத்துறை பொறுப்பாளர் பரா, வள்ளிபுனம் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் விடுதலைப்புலிகள் பத்திரிகையின் ஆசிரியர் ரவி, தேவிபுரம் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் சமாதான செயலகப்பணிப்பாளர் சி. புலித்தேவன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர். (க)

# தளபதி ரமணன் மீதான தாக்குதல் சமாதானத்திற்கு அடிக்கும் சாவுமணி

## விடுதலைப்புலிகள் கண்டனம்

தளபதி ரமணன் மீதான தாக்குதல் சமாதான முன்னெடுப்புக்களுக்கு சாவுமணி அடித்து எம்மை மீண்டும் ஒரு பாரிய யுத்தத்துக்கு வலிந்திழுக்கும் நடவடிக்கையாகும் என மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறை வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2006.05.21ஆம் திகதி பி.ப 5.30 மணியளவில் இராணுத்தினர் அவர்களது வவுணதீவு முன்னரங்கக் காவலரணில் இருந்து மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் துணைத் தளபதி ரமணன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

வவுணதீவில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் எம் காவலரண் மீதும், போராளிகள் மீதும் தொடர்ந்து இவ்வகையான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களது தாக்குதல் நடவடிக்கைகளைப் பற்றி தங்களுக்கு பலமுறை எடுத்துக் கூறியும் நடந்த சம்பவங்களை நேரில் காண்பித்தும் நீங்கள் தகுந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது எமக்குப் புலனாகின்றது.

இவரது வீரச்சாவு எமது மாவட்டத்தின் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஒரு பேரிழப்பாகும்.

அத்துடன் சமாதானத்தை முன்னெடுப்பதற்காக எம்மால் முன்னெடுத்து வரும் அத்தனை நடவடிக் கைகளுக்கும் சாவு மணியடித்து எம்மை மீண்டும் ஒரு பாரிய யுத்தத்துக்கு வலிந் திழுக்கும் நடவடிக்கையாகவே இதை நாம் கருதுகின்றோம்.

இப்படுகொலையை தமிழீழ விடுதலைப் புலகள் மிக வன்மையாக கண்டிப்பதுடன் இது ஒரு பாரிய யுத்த நிறுத்த மீறலாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (க)



சுன்னாகம்

# கதிரமலைச் சிவன் மஹோற்சவம்

11ஆம் நாள்

இன்று கிருஷ்ணகந்தோற்பவக் காட்சி



### நீயருளு மையா

சந்ததமு முந்தனெழிற் சந்நிதியில் கூடி
தங்கவலை தீரவிழி நீரொழுக வாடி
பந்தமதா லுழல்வாழ்வுப் பாடுகளே யோட
பரிதவிக்கு மாந்தரவ குய்திபெற வைப்பாய்
நொந்தழுது வெம்புமடி யார்கவலை நீறாய்
நெக்கியழிந் துக்கி விட நீயருளு மையா
சுந்தரமு கத்துநடு கண்ணிலெழு பொறியே
செய்தருளும் அம்பிகை இணைந்த பெருமானே!

–இயல்வாணன்

# வடக்கு - கிழக்கில் அபி. திட்டங்களை கைவிடும் நிர்ப்பந்தத்தில் உலக வங்கி!

(கொழும்பு)

தற்போது தலைதூக்கியுள்ள வன்முறை அச்சுறுத்தல்களினால் வடக்கு- கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களை கைவிடுவதற்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று உலக வங்கியின் உபதலைவர் பிரேபுல் பட்டேல் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவர் கடந்த வெள்ளியன்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு கூறினார்.

கடந்த 19 வருடங்களாக இடம்பெற்று வந்த சிவில் யுத்தத்தால் சின்னாபின்னமாக சிதைக்கப்பட்ட வடக்கு - கிழக்கை கட்டியெழுப்ப பல அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பின்னர் வீடமைப்பு, நீர்ப்பாசன மற்றும் விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போதைய வன்முறைகளினால் இதனை கைவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மூன்று மாதங்களாக நடந்துவரும் வன்முறைகளை நாம் மிக உன்னிப்பாக கவனித்து வருகின்றோம். வடக்கிலும் கிழக்கிலும் பாதுகாப்பு நிலை உருவாக வேண்டும். அதுவரை நாங்கள் காத்திருக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

பாதுகாப்பு விடயத்தில் முன்னேற்றம் ஏற்பட்டால்தான் அபிவிருத்தித் திட்டங்களும் அபிவிருத்தியடையும். இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளுக்காக ஆதரவு வழங்குமாறு வங்கியை மீண்டும் வலியுறுத்த நாம் தயங்க மாட்டோம்.

எது எப்படியிருப்பினும் இலங்கைக்கு வங்கிக் கடன் கொடுப்பதை இதுவரை வன்முறை பாதிக்கவில்லை. கடந்த சில வருடங்களில் சுமார் 80 மில்லியன் அமெரிக்க டொலர் முதல் 100 மில்லியன் அமெரிக்க டொல் வரை (63 மில்லியன் முதல் 78 மில்லியன்) வழங்கப்பட்டுள்ளது என்று பட்டேல் மேலும் கூறினார். (க)

# சோகத்தில் மூழ்கிய மட்டக்களப்பு



(மட்டக்களப்பு)

தளபதி ரமணனின் இழப்பால் மட்டக்களப்பு மாவட்டம் சோகத்தில் மூழ்கிக் கிடக்கிறது. தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் என பலரும் இறுதி வணக்கம் செலுத்தி மட்டக்களப்பு மாவட்ட துணைத் தளபதி ரணனின் வித்துடலுக்கான முதலாவது வீரவணக்க நிகழ்வு ராஜன் பயிற்சி கல்லூரியில் நடைபெற்றது.

ராஜன் பயிற்சி கல்லூரி பொறுப்பாளர் கீதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை தளபதி ரமணனின் தாயார் ஏற்றிவைத்தார்.

தளபதி ரமணனின் மாமியாரால் மலர் வணக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தழிழீழ தேசியக்கொடி போர்த்தி வீரவணக்கம் செலுத்தினார்.

அதனை தொடர்ந்து தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்களால் வித்துடலுக்கு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

வித்துடல் தாங்கிய பேழை பெண்டுகள் சேனை பகுதிக்கு மக்கள் அஞ்சலிக்காக எடுத்து செல்லப்பட்டது நேற்று முன்தினம் மாலை வித்துடல் கரடியனாறு தேனகத்துக்கு எடுத்துச் வரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. (க)

# கேணல் தர தளபதியாக ரமணன் அறிவிப்பு

(கிளிநொச்சி)


படையினரின் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி ரமணனுக்கு கேணல் என்ற இராணுவ தர நிலையை தமிழீழ தேசியத் தலைவர் நேற்று வழங்கியுள்ளார்.

தமிழீழ தாயக விடுதலைப் போரில் கேணல் தர நிலையில் வீரச்சாவைத் தழுவிய நான்காவது தளபதி ரமணன் ஆவார். இவரே மட்டு. மண்ணில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் கேணல் தர தளபதி என்பது குறிப்பிடத்தக்கது.

1986ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட கேணல் ரமணன், இந்தியப் படைகளிற்கு எதிராக மட்டு- அம்பாறை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதல்களில் தளபதி றீகன் தலைமையிலான அணியில் முக்கிய பங்காற்றியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவில் நீண்டகாலமாகப் பணியாற்றிய இவர் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களின் இராணுவப் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளராகப் பொறுப்பேற்ற பின்னர் படைகளிற்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை வழிநடத்தியிருந்தார். அத்துடன் தமிழீழத்திற்கு வெளியே நடத்தப்பட்ட நடவடிக்கைகளிலும் கேணல் ரமணன் பங்கு முக்கியமானதாக இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மாவடி முன்மாரிக்கோட்டத்தின் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட ரமணன் அங்கு விடுதலைப் புலிகளின் இராணுவக் கட்டமைப்புக்களை சீரமைக்கும் பணிகளை சிறப்புடன் மேற்கொண்டதுடன் அப் பகுதி மக்களிற்கு அரசியல் விழிப்புணர்வை உண்டாக்கும் பரப்புரை நடவடிக்கைகளையும் சிறப்பாக மேற்கொண்டார்.



இந்நிலையில் மட்டு- அம்பாறை மாவட்டங்கள் தனித்தனி இராணுவ நிர்வாக மாவட்டங்களாக பிரிக்கப்பட்ட பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் துணைத் தளபதியாக நியமிக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றி வந்த நிலையில் வவுணதீவு முன்னரங்கப் பகுதியில் படையினரால் கொல்லப்பட்டார். (க)

# சமுகமளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த தரம் 4, 5 மாணவர்களையும் ஆசிரியர்களையும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலைக்கு சமுகம் தருமாறு அதிபர் பத்மநாதன் கேட்டுள்ளார். (க)

# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியைச் சேர்ந்த தரம் 11 மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரிக்கு வருகை தருமாறு அதிபர் அகிலதாஸ் கேட்டுள்ளார். (க)

# சட்டவிரோத கட்டடங்களை அப்புறப்படுத்த கோரிக்கை

கடலோரப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை உடனடியாக அப்புறப்ப்டுத்துமாறு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளது.

அவ்வாறு கட்டடங்களை அகற்றாவிடின் அரசு உடனடியாக தலையிட்டு கட்டடங்களை அகற்றுவதுடன் இதற்காக அரசு செலவிடும் பணத்தை சட்டவிரோதமாக கட்டடங்களை கட்டியவர்களிடமிருந்து அறவிடவும் நடவடிக்கை எடுத்துள்ளது என திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி ஆர்.ஏ.டி.வ சமரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அப்புறப்படுத்தப்பட வேண்டிய 200 கட்டடங்களை ஏற்கனவே கரையோர பாதுகாப்பு திணைக்களம் இனங் கண்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை நீர்கொழும்பு கரையோர பிரதேசங்களில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட 14 கட்டடங்கள் கடந்த வாரம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# கொழும்பு மாநகர நிர்வாகத்தை ஐ.தே.க சுயேச்சைக் குழுவிடமிருந்து பெற முயற்சி

## சவாலை வெல்வோம் என்கிறார் சிறிசேன குரே

(கொழும்பு)

கொழும்பு ஜக்கிய தேசிய கட்சியின் கோட்டை கொழும்பு தான் என்பதை தெளிவாக வெளிப்படுத்தி விட்டோம். இனிக்கொழும்பு மாநகர சபையில் ஜ.தே.கவின் நிர்வாகத்தை முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கான செயற்பாட்டை ஆரம்பிப்போம்.

இவ்வாறு தெரிவித்தார் ஜக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகரச்சபைத் தேர்தலுக்கான முதன்மை வேட்பாளர் சிறிசேன குரே.

தேர்தலில் ஜ.தே.க ஆதரவுடைய சுயேச்சைக்குழு வெற்றி பெற்றதையடுத்து கருத்து வெளியிட்ட சிறிசேன குரே மேலும் கூறியதாவது,

நாம் மேற்கொள்ளவுள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடி வருகிறோம். கொழும்பு மாநகர நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவது பற்றி ஏற்கனவே நாம் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து தீர்மானித்திருக்கிறோம். எப்படியும் நாம் இது விடயத்தில் சில சவால்களை எதிர்நோக்க வேண்டிவரும். ஆனால் அவற்றை நாம் முறியடிப்போம் என்றார்.

இதற்கிடையில் கொழும்பு மாநகரசபைக்கான தேர்த லில் ஜ.தே.க தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் அக்கட்சி ஆத ரித்த சுயேச்சைக்குழு வெற்றி பெற்றிருக் கின்றது அந்த சுயேச்சைக்குழு உறுப்பினர்களிடமிருந்து நிர்வாக அதிகாரத்தை ஜ.தே. கட்சியினர் பெற்றுக்கொள்வதில் பல சிக்கல்கள், சட்ட நெருக்கடிகள் இருக்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (க)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல: 18

ஆக்கம்: மூ.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை

வினாத்தாள் - II நேரம்: 1 மணி 15 நிமிடம்

**கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து 1-15 வரையான வினாக்களுக்கு விடை தருக:**

அடிச்சேரிக் கிராமத்தில் மீனாட்சிப்பாட்டி சிறப்புடன் வாழ்ந்து வந்தார். விதவையான இவரை மலடி என்றும் பலர் இகழ்வார்கள். ஆனால் இவரோ ஏழைப் பிள்ளைகள் மீது மிகுந்த அன்புடையவர். இக் கிராமத்தில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு வருடந்தோறும் கற்றல் உபகரணங்களை வருட ஆரம்பத்திலேயே இலவசமாகக் கொடுத்து உதவி வந்தார். இவரது அகாலமரணம் கிராமத்தையே சோகத்தில் ஆழ்த்தியது.

01.விதவை என்பதன் ஆண்பால் ....................................

02.மலடி என்று யாரை அழைப்பர் ....................................

03.இகழ்வார் என்பதன் எதிர்ச்சொல் ....................................

04.கற்றல் உபகரணங்கள் மூன்று ....................................

05.அகால மரணம் என்றால் என்ன ....................................

06.சோகம் என்பதன் ஒத்தசொல் ....................................

07.மரண வீட்டில் கேட்கும் கிராமியப் பாடல் ....................................

08.மரணமடைந்த மீனாட்சிப்பாட்டியை எப்படிக் கூறுவார்கள்?
....................................

09.மரண வீட்டில் கேட்கும் கிராமிய வாத்தியம் ....................................

10.'இழவு' வீட்டின் வீதியோரவாசல் எப்படி அலங்கரிக்கப்பட்டிருக்கும்?
....................................

11.வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிகள்? .................................... ....................................

12.இவர்களைச் சிபார்சு செய்வதற்கு அண்மையில் நியமிக்கப்பட்ட கிராம சேவையாளர் அல்லாத உத்தியோகத்தர்.
....................................

13.பாடசாலையில் முதலாம் தவணை தொடங்கும் மாதம்
....................................

14. இம்மாதத்தில் பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகள்?
1. .................................... 2. ....................................
3. ....................................

15. அதே மாதத்தில் கொண்டாடப்படும் விசேட பண்டிகை
....................................

**கீழே தரப்பட்டுள்ள விளையாட்டுக்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.**



16. ....................



17. ....................




18. ....................



19. ....................

**கீழேயுள்ள சட்டகத்தை அவதானித்து அறிவுறுத்தல்களுக்குப் பொருத்தமான விடையின் இலக்கத்தைக் கட்டமிடுக.**




20.கீழிருந்து மூன்றாவது வரிசையில் இடமிருந்து வலமாக மூன்றாவது கூட்டிலுள்ள பொருள்?
1.இலை 2.தென்னை 3.பூ

21.மேலிருந்து நான்காவது வரிசையில் வலமிருந்து இடமாக இரண்டாவது கூட்டிலுள்ள பொருள்?
1.கோப்பை 2. மாங்காய் 3.கோழிக்குஞ்சு

22.வீட்டை இரண்டாவது நிரலுக்கு இடமாற்றினால் கீழிருந்து எத்தனையாவது வரிசையில் வலமிருந்து இடமாக மூன்றாவதாக இருக்கும்?
1) 4 2) 3 3) 4

23.தென்னையை இரண்டாவது நிரலுக்கு நகர்த்தினால் மேலிருந்து மூன்றாவது வரிசையில் இடமிருந்து வலமாக எத்தனையாவது கூட்டில் இருக்கும்?
1) 2 2) 3 3) 4



24.இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை?
1) 11 2) 5 3) 7

25.இவ்வுருவிலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை?
1) 14 2) 10 3) 12

**கீழே தரப்பட்டுள்ள எழுத்தை மூன்று வகையாக உயிர்குறியுடன் எழுதுக.**

26.ச .................... 27.ச ....................

28.ச ....................

**29 - 33 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைச் சுற்றிக் கட்டமிடுக.**

29.ஒட்டுண்ணித் தாவர வகையைச் சார்ந்தது குருவிச்சை / முசுட்டை

30.நச்சுத் தன்மையுள்ள காய் காய்க்கும் தாவரம்
ஆமணக்கு / அரலி


31.இரவில் சுருங்கி காலையில் இதழ் விரிக்கும் மலர்
தாமரை / அல்லி

32.வேரினால் மட்டும் இனம் பெருக்கும் தாவரம்
கறிவேப்பிலை / ஈரப்பலா

33.நீண்டகாலத்துக்கு ஒரு முறை பூக்கும் பூ
கார்த்திகைப் பூ / குறிஞ்சிப் பூ

**கீழே தரப்பட்டுள்ள படங்களின் சிங்களச் சொற்களில் தவறவிடப்பட்ட எழுத்துக்களை இடைவெளியில் எழுதுக.**

34.



மේ..........ය

35.



ඉ..............

36.



ග..........ය

**சுருக்கமான விடை தருக**

37.வீதியைக் குறுக்காகக் கடக்குமிடத்தில் வரையப்படும் கோட்டின் நிறம் என்ன?
....................................


38.இலங்கையின் புகையிரதச் சந்தி ஒன்று....................................

39.நெற்பயிரை இளமையில் பிடுங்கி நாட்டுவதை எவ்வாறு அழைப்பர்
....................................

40.இலங்கையில் விரைவில் வெளியிடப்படவுள்ள தாள் நாணயம் எது?
....................................

**கீழேயுள்ள படம் ஒரு பிராணியின் வாழ்க்கை வட்டமாகும்**

இப்பிராணியின் பெயர்
....................................




**ஆங்கில எழுத்துக்கள் குறித்து நிற்கும் பெயரை எழுதுக.**

41.A ....................................

42.B ....................................


43.C ....................................

44.D ....................................

**ஒரு யூஸ் வியாபாரி ஒரு வாரத்தில் விற்ற யூஸ் பக்கெட்டுக்களின் எண்ணிக்கை படத்தில் காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப வினாக்களுக்கு விடை எழுதுக.**

45.ஒரு பக்கெட்டின் விலை 5.00 ஆயின் வாரத்தில் அவனது வரவுத் தொகை என்ன?

46.ஒரு பக்கெட்டை ரூபா 3.50 க்கு கொள்வனவு செய்தால் அவனுக்குக் கிடைக்கும் இலாபம் எவ்வளவு?




(05ஆம் பக்கம் பார்க்க...)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் -16

## அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 01.செ.ஆன்டிலக்ஸி | - யா/கொ. திருநாவுக்கரசு மகா வித்தியாலயம். |
| 02.ஸ்.அச்சுதன் | - யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை. |
| 03.சி.கார்த்திக் | - யா/ஆ.மெ.மி. வித்தியாலயம். |
| 04.ஆ.கஜன் | - யா/காரைநகர் ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம். |
| 05.ரி.ஆத்மன் | - யா/சென்ஜோன்ஸ் கல்லூரி. |
| 06.க.கீர்த்திகா | - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. |
| 07.யோ.மனோசன் | - யா/வல்லை றோ.க.த.க. பாடசாலை. |
| 08.ஜெ.தீபிகா | - யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம். |
| 09.சு.சத்ஜன் | - யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை. |
| 10.சி.சுகிர்தா | - யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 11.இ.கிருஷிகேசன் | - யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். |
| 12.சி.பிரஷாந் | - யா/வல்லை அ.மி.த.க. பாடசாலை. |
| 13.ந.யசோதா | - யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி. |
| 14.ஆ.தமிழினி | - யா/வல்லை அ.மி.த.க.பாடசாலை. |
| 15.ம.சங்கவி | - யா/வட்டு. சுப்பிரமணிய வித்தியாலயம். |
| 16.யோ.தர்சிகா | - யா/துணவி அ.மி.த.க. பாடசாலை. |
| 17.செ.செந்தாரகா | - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. |
| 18.செ.கிருஸ்ணகுமார் | - யா/துணவி அ.மி.த.க.பாடசாலை. |
| 19.சு.அருந்துசா | - யா/வல்லை றோ.க.த.க பாடசாலை. |
| 20.பா.லிவின்சன் | - யா/இந்து ஆரம்ப பாடசாலை. |
| 21.இ.இனோசா | - யா/அருணோதயாக் கல்லூரி. |
| 22.ச.தக்ஷாயினி | - யா/புனித ஜோன் பொஸ்கோ. |
| 23.இ.கஸ்தூரி. | - யா/வதிரி இருதயக் கல்லூரி. |
| 24.ச.மதுசா | - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. |
| 25.சி.கார்த்திக் | - யா/இடைக்குறிச்சி ஶ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம். |
| 26.ர.நிசாந் | - யா/ஆ.மெ.மி.வித்தியாலயம். |
| 27.தே.தனோஜன் | - யா/அத்தியார் இந்துக் கல்லூரி. |
| 28.மு.பிரசண்ணா | - யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 29.நி.பகீரதன் | - யா/துணவி அ.மி.த.க. பாடசாலை. |
| 30.கி.ராகவி | - யா/துன்னாலை தெ.அ.த.க.பாடசாலை. |
| 31.ஸ்.அபிசேக் | - யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை. |
| 32.சோ.கஞ்சபன் | - யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடச்ாலை. |
| 33.ம.பார்த்தீப்ன் | - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம். |
| 34.சு.கீர்த்தனா | - யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 35.க.ஹரிகரசர்மா | - யா/புற்றளை மகா வித்தியாலயம். |
| 36.மோ.கிரிஷாந் | - யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம். |
| 37.யோ.அஜந்தன் | - யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை. |
| 38.சோ.யுகராஜசர்மா | - யா/புத்தூர் ஶ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி. |

(0 - ஆம் பக்கத் தொடர்ச்சி)

47.அவனுக்குக் கூடுதலாக இலாபம் கிடைக்கும் நாட்கள் எவை?

..................................................

48.ஒரு பைக்கட் தயாரிக்க 50 ML பால் தேவையெனில் புதன்கிழமை எத்தனை L பால் தேவை?

..................................................

49.திங்கட்கிழமை விற்கப்பட்ட பக்கெட்டுக்களின் எண்ணிக்கை?

..................................................

50.ஞாயிற்றுக்கிழமை ஒரு பக்கெட்டை ரூபா 3.25க்கு கொள்வனவு செய்தால் அன்றையதினம் கிடைக்கும் இலாபம் எவ்வளவு?

..................................................

51. 13739 ஐ சொற்களில் எழுதுக?

..................................................

**முன் பின் எண்களை எழுதுக.**

52. ............................ 99999 53. ............................

54.20 பேருக்கு ஒரு நாளுக்கான உணவுச் செலவு 1200 ரூபா எனின் 20 பேருக்கும் 72 மணித்தியாலத்துக்கான உணவுச் செலவு என்ன?

..................................................

55. 250 cm நீளமான நாடாவை 5 சம பகுதிகளாக்கி 3 பங்கை விற்பனை செய்தபின் மிகுதியை மீற்றரில் தருக?

..................................................

**56 - 60 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கதையின் ஆரம்பத்தையும் முடிவையும் அவதானித்து விடுபட்ட பகுதியை எழுதுக.**

கவலைப்படாதே உன் குஞ்சுக்கு நான் வைத்தியம் செய்கிறேன் எனப் பூனை தாய்க்கோழியிடம் கூறியவாறு...

56. ..................................................

57. ..................................................

58. ..................................................

59. ..................................................

60. ..................................................

அப்போது தப்பினேன் பிழைத்தேன் என்று பூனை ஓடத் தொடங்கியது.

## வினாத்தாள் – 16 இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01. சி.கோபிதாஸ் | 02. கா.சூரியவாசன் | 03. R.றுக்சி |
| 04. மா.சத்தியபாமா | 05. O.M.மன்சூர் பாருக் | |
| 06. M.B.பாத்திமாபேகம் | 07.லால் முதியான்சே | 08.T.B.ராஜபக்ச |
| 09. R.G.சுனேத்ரா | 10.180 | 11. 4 |
| 12. கண்டி | 13.மேல் மாகாணம் | 14. திருகோணமலை |
| 15. பொலனறுவை | 16. 1m 10cm | 17. பவித்ரா |
| 18. ஐந்தாமிடம் | 19. காரிணி, அகல்யா, பவித்ரா | |
| 20.வீராங்கனை | 21.2 | 22. 3 |
| 23. 623 | 24. 637 | 25. 634 |
| 26. 5 kg | 27. 120.00 | 28. 310 |
| 29. 500.00, 100.00, 50.00 | 30.170.00 | 31. ஆசிரியர் |
| 32. சித்திரை | 33. நுவரெலியா | 34. பூ |
| 35. மேசை | 36. அன்பு | 37. நான் |
| 38. மாமா | 39. 1 | 40. 2 |
| 41. இலைப்பாசி | 42. அல்கா | 43. கண்டல் |
| 44. தாமரை | 45. கோரை | 46. நவ |
| 47. Ship | 48. நெலும் | 49. Lotous |
| 50. 1 | 51. 2 | 52. M |
| 53. M | 54.W | 55. W |

56- 60 பொருத்தமான வசனங்கள்

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 18

மாணவர் முழுப்பெயர் : ..................................

பாடசாலையின் பெயர் : ..................................

வீட்டின் முகவரி : ..................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 31.05.2006 இற்கு முன் அனுப்பிவைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 18
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வனா இலக்கங்களை சரியாகக் குறிபபிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை 49

### மீண்டும் மீள முடியாத ரோபன் தீவில்



'இன்னும் அதிகம்' போதாது. என்று வேறு உறுமுவான். இது முடிந்து திரும்பினால் ஆறிப்போன கூழ். தேடினாலும் காய்த்துண்டு கூட குழம்பில் தெரியாது. வாரத்துக்கு ஒருமுறை, ஒரே ஒரு சிறு மாமிசத்துண்டு மிதக்கும். கடிக்க முடியாத அந்த மாமிசத்தை எங்கு தான் தேடிப்பிடித்து வாங்கினார்களோ...

ஒரு நாள் இந்த வேலையை மாற்றி கடற்கரைக்கு வண்டியில் கொண்டு போய் கடற்பாசிகளை எடுக்கச்சொன்னார்கள். இந்த மாற்றம் ஒரளவு மகிழ்ச்சியைத் தந்தது. விரிந்த கடலையும்த தூரத்தே மிதந்த கப்பல்களையும் பார்க்க முடிந்தது. பாறைகளையும் ஒட்டிக் கொண்டிருந்த கூனி போன்ற ஒருவகை மீனைச் சிரமப்பட்டுப் பிடித்துச் சேகரிப்பார்கள். அதை இவர்களே வேக வைத்துச் சாப்பிடுவார்கள் அன்றைக்கு அது விருந்துபோல இருக்கும். வார்டர்களும், வாங்கிச் சாப்பிடுவார்கள். நிறையக் கிடைத்தால், சிறைக்கும் கொண்டு வந்து, மற்ற கைதிகளுக்கும் பரிமாறுவார்கள். ஆனால், இது சில நாட்கள் மட்டுதான் தொடரும்.

சுண்ணாம்புப் பாறைகளில் சுண்ணாம்பை வெட்டிஎடுக்கும் வேலைதான் கொடுமையானது. வெயிலில் சுண்ணாம்பு வெண்பாறை மின்னும். கண் கூசும். அதை வெட்டி எடுக்கும் போது தூசி பறக்கும். அது வியர்ந்த உடம்பில் பட்டுக்கொதிக்கும். இந்த வேலை செய்து திரும்பிய நாட்களில் தூக்கம் வராது. கண் எரியும் உடம்பு வலிக்கும். இதில் இன்னும், இன்னும் என்ற மிரட்டலும் கூடிய வாறே இருந்தது.

சிறைக் கைதிகளுக்கு மதபோதனை செய்ய ஞாயிறு தோறும் பல கிறிஸ்துவ சபைப் பாதிரியார்கள் மாறி மாறி வருவது உண்டு. அவர்கள் பைபிளை வாசித்து விட்டு. 'மனந்திருந்து. பாவ மன்னிப்புக்கேள் ஆண்டவனிடம் முறையிடு; தேவன் கைவிட மாட்டார். அவர் உன்னுடனே இருக்கிறார். எதிரியையும் மன்னிக்கக் கற்றுக்கொள். தேவனுக்கு ஒப்புக்கொடு!' என்பது போலத் தொடர்ந்து உபதேசம் செய்வது வழக்கம். இதைக்கேட்டுப் பொறுமையிழந்த ஒரு கிறிஸ் துவ மதக்கைதித "பாதிரியார் அவர்களே எழுபத்தி ஐந்து வருடங்களாக இப்படித்தான் ஜெபிக்கிறேன். இங்கே வந்து சேர்ந்து இருக்கிறேன்.

பரலோகம் போக ஜெபித்தேன். சிறைக்கு வந்து சேர்ந்துள்ளேன் எங்களை மனந்திருந்தச் சொல்கிறீர்கள். கொஞ்சம் நமது ஆட்சியாளர் களிடம் இதைச் சொல்லுங்கள் இடம் மாறிப் பேசுகிறீர்கள்" என்று கடகடவென்று பேசியவுடன் பெட்டி பைபிளை எடுத்துப்போன பாதிரியார் மீண்டும் வரவேஇல்லை.

இன்னொரு முறை பாதிரியார் வந்திருந்த போது, ஒரு கைதி தானே பைபிளை வாசித்து, பாட்டுப்பாடி, ஜெபக் கூட்டத்தை நடத்தி ஜெபம் பண்ணுவோம் என்றார். பாதிரியாரும் கண்ணை மூடி ஜெபித்துக்கொண்டிருந்தார். கைதி மெதுவாக நகர்ந்து பாதிரியாரின் பையைத் திறந்து அவர் பையிலிருந்த பத்திரிகைகளை எடுத்துவிட்டு மூடிவிட்டார். மறுமுறை வந்த போது பாதிரியாரின் பையில் பத்திரிகையே இல்லை.

சிறைக் கொடுமைகளை எதிர்த்து மண்டேலாவும், சகாக்களும் போராடிக்கொண்டேதான் இருந்தனர். சில திருத்தங்கள் வந்தன இருந்தாலும் நரகம், நரகமாகவே நீடித்தது.

மண்டேலாவைப் பார்க்க இரண்டாண்டுக்கு ஒருமுறை வின்னிக்கு அனுமதி வழங்கியது அரசு. அப்பொழுதும் அவர் ஜோகன்ஸ்பர்க்கிலிருந்து ரயில், பேருந்தில் பயணம் செய்யாமல், விமானத்தில் தீவுக்குப் போக வேண்டும் என்பது நிபந்தனை. சந்திப்புக்கு 30 நிமிடம் அனுமதி குடும்ப விஷயம் தவிர வேறு எதையும் பேசக்கூடாது. இருந்தாலும் வின்னி, சிரித்த முகத்துடன் வந்துகொண்டிருந்தார். அப்பொழுதும் வார்டர்கள் நின்று கேட்பார்கள். இந்தச் சந்திப்பும், வின்னியின் இடைவிடாத போராட்டத்திற்குப் பின் கிடைத்த அனுமதி.

ஒருமுறை தன் இளம் அழகிய மகளையும் அழைத்துக்கொண்டு வந்தார். அவருக்கு அப்பாவைத் தெரியாது. அம்மா சொன்னவுடன் அப்பா கழுத்தில் தொங்கிக்கொண்டாள் அன்று மட்டும் 45 நிமிடம் அனுமதி நீட்டிக்கப்பட்டது. அன்று இருந்த அதிகாரி அவர்களைத் தனி அறையில் இருக்க அனுமதித்தார். பல வருடங்களுக்குப்பிறகு மனைவியைப் பிடித்து முத்தமிட்டார்.

இரண்டு முறை வழக்கறிஞர் பிராம் பிசர் மண்டேலாவைச் சந்திக்க வந்தார். அன்று கெடுபிடி குறைவாக இருந்தது. அவர் மூலம் வெளியில் நடப்பதை ஒரளவு தெரிந்து கொண்டார் மண்டேலா. பிராம் பிசர் சிறை நிலைமைகளின் அலங்கோலத்தை, மனிதாபிமானமற்ற நடைமுறைகளைப் பத்திரிகைகளில் எழுதினார்.

இதைத் தொடர்ந்து வேறு பல நாட்டினர். செஞ்சிலுவைச் சங்கம்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைச் சங்கத்தினர் வரத்தொடங்கினர். இவர்கள் சிறையைப் பார்வையிட வருகிறார்கள் என்பதைத் தெரிவிக்க மாட்டார்கள். ஆனால் சாப்பாடு வருகிறபோது வழங்கப்படுகிற குழம்பில் சில காய்கறித் துண்டுகள் கலந்தும், ஒரிரு மாமிசத் துண்டுகளும் மிதந்தால், மறுநாள் யாரோ ஒருவர் அல்லது ஒரு குழு சிறை நிலையைப் பார்க்க வருகிறது என்பதைத் தெரிந்து கொள்வார்கள் குழம்பு தான் செய்தி அறிக்கை.

வெளிநாட்டுப் பத்திரிகைகள் கடுமையாக விமர்சனம் செய்ததன் விளைவாக மூன்று நீதிபதிகள் பார்வையிட வந்தனர். சிறையிலிருந்தோர் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள். எதிரும் புதிருமாக இருந்த ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ்காரர்களும், சுத்த ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ்காரர்களும் இருந்தனர். சுத்த தேசியக் காங்கிரசின் தலைவர் சோபுக்வேக்கு இரண்டாண்டு தண்டனை முடிந்த பின்னரும், தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் தொடர்ந்து சிறையில், ஒரு தனி அறையில் பல ஆண்டுகள் வைத்திருந்தனர்.

பக்கத்து நாட்டு சுதந்திரப் போராட்ட வீரர்களும் இருந்தனர். இவ்வாறு ஏழு பிரிவுக் கட்சியினர் இருந்தனர். இவர்கள் வெளியில் இருந்த போது வெள்ளையரை எதிர்த்து சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள்தான். ஆனால் இந்தப் புரட்சிக்காரர்கள். ஒருவரையொருவர் விமர்சித்ததோடு நில்லாதுத சண்டை போட்டு கொலை செய்ததும் உண்டு... வெளியில் கருத்தால், கத்தியால் சண்டை ஆனால், சிறைக்குள் அடைக்கப்பட்ட பின்னர் ஒன்றுபட்டனர்.

அவர்கள் ஒன்றாகக் கூடி (மிக ரகசியமாக-சிரமப்பட்டுத்தான்) மண்டேலாவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். எனவே வந்தவர்களிடம் மண்டேலாதான் குறைகளை எடுத்துச் சொல்வார். இது ஆறுமாதத் திற்கொரு முறை ஆண்டுக்கு ஒருமுறை என நடந்துவந்தது.

சிறையில் வாடும் அரசியல் கைதிகள் படிக்கப்புத்தக்கங்கள், பத்திரிகைகள் வேண்டும். தேர்வு எழுதி பட்டம்பெற வாய்ப்புத்தர வேண்டும் என்பதும் ஒரு கோரிக்கை. (தொடரும்)

## கிராமசேவை உத்தியோகத்தர்களின் சேவையை இலகுவாக்க புதிய திட்டம்

கிராம சேவை உத்தியோகத்தர்களின் சேவையை இலகுவாக்குவதற்கானபுதியசட்டதிட்டமொன்றை அமைக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித் துள்ளது.

இதற்கான அடிப்படை திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சந்திர சிறி கஜதீர தெரிவித்துள்ளார். கிராம சேவை உத்தியோகத்தர்களின் சேவை முறைகள், அதற்கான உரிமைகள், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள் உட்பட பல விடயங்கள் புதிய சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக குறிப்பிட்ட தொழில் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதேவேளை கிராம சேவை உத்தியோகத்தர்களின் சேவையை இலகுவாக்குவதற்கான புதிய சட்டதிட்டமொன்றை வகுப்பது காலத்தின் தேவையாகுமென அதனைச்சார்ந்த தொழிற் சங்கங்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (து)

## நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

படுகொலைகளைநிறுத்தி நாட்டின் பாதுகாப்பை உறுதிப் படுத்த அரசாங்கம் உரியநட வடிக்கை எடுக்க வேண்டும். நாட்டை அழிவிலிருந்துகாப்பாற்றஐக்கிய தேசிய கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

இதனை மக்களும் உணர்த்தியுள்ளனர் என்று ஐ.தே கவின் பிரதி தலைவர்கரு ஜயசூரிய தெரிவித்தார். ஜனாதிபதி தன்னிச்சையாக சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடவடிக்கை நிறுத்தப் படவேண்டும். மக்கள் எங்கள் மீது வைத்துள்ள எதிர்பார்ப்புக்களைநாம் நிறைவேற்றுவோம் என்றும் அவர் கூறினார். எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (க)







வலிதெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை இரண்டு நாள் நடத்திய கலை இலக்கியப் பெருவிழாவில் பிரதேசச் செயலர் சி.திருவாகரன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் நிருவாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் நிற்பதையும் "ஞான ஏந்தல்" விருதினை சிவசண்முக வடிவேலுக்கு முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தர்ப்பரானந்தன் வழங்குவதையும் நாடகக் கலைஞர் ம.பொனிபஸ் இருதாய நாதனுக்கு ஞானஏந்தல் விருதினை கலாபூஷணம் சு.துரைசிங்கம் வழங்குவதையும் அருகில் அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி சிவராணி நிற்பதையும் படங்களில் காணலாம்.

பொறுமையற்று நிதானம் தவறி உணர்ச்சி வசப்பட்டு நடப்பதினால் நமக்கு ஒரு லாபமும் ஏற்படாது.

-பிளேட்டோ

வலம்புரி

## நோர்வேக் குழுவின் வருகையால் ஏதேனும் நன்மை கிடைக்குமா?

நோர்வேத் தூதுவர் பிறட்ஸ்கர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

அல்லைப்பிட்டி,மந்துவில் உள்ளிட்ட இடங்களுக்கு விஜயம் செய்த நேர்வேத்தூதுக்குழுவினர் யாழ்.செயலகத்தில் அரச அதிபர் மற்றும் மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்தனர்.

அல்லைப்பிட்டியில் நடந்த படுகொலைச் சம்பவம், மந்துவில் பகுதியில் காணாமல் போனோர் மற்றும் அல்லைப்பிட்டியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் எதிர்காலம், ஊடகத்துறையினருக்கு ஏற்பட்டுள்ள அபாயம் என்பன குறித்து ஆராய்வதற்காகவே நோர்வேத்தூதுக்குழு யாழ்ப்பாணம் வருகைதந்திருந்தது.

சமாதான அனுசரணைப்பணியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் சார்பில் இலங்கைக்கான அதன் தூதுவர் தலைமையிலான குழு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தமை முக்கியமானதோர் விஜயமாகவே கருதப்படவேண்டும்.

எனினும் அவர்களின் வருகையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படக்கூடிய ஆறுதல் என்ன? என்பதே இப்போதைய கேள்வி.

சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நாடு என்ற வகையில்,அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நோர்வேக்குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனரா?

அல்லது , அவர்கள் அல்லைப்பிட்டி உள்ளிட்ட தீவகப்பகுதி மற்றும் மந்துவில் ஆகிய இடங்களில் நடந்த பயங்கரம் குறித்து ஜனாதிபதிக்கும், சர்வதேச நாடுகளுக்கும் தெரிவிப்பார்களா?

அதன் மூலம் யாழ்ப்பாணத்து தமிழ் மக்கள் படும் துன்ப துயரங்களுக்கு முடிபு கட்டுவார்களா? என்ற நியாயமான கேள்விகளுக்கும் பதிலளிக்கும் தார்மீகப்பொறுப்பு நோர்வேத் தூதுக்குழுவிற்கு உண்டு.

நோர்வேத் தூதுக்குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பின்னரும் கொலைகள், இடப்பெயர்வுகள், பயங்கரமான சூழ்நிலைகள் இருக்குமாயின் குழுவினர் வராமல் இருந்திருக்கலாம் என்றே கூற வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த நோர்வேக் குழுவிடம் மகஜர் கையளித்த மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளிடமும் ஓர் அன்பான வேண்டுகோளை இவ்விடத்தில் விடுவது சாலப்பொருத்துடையது.

ஐயா, யார் வந்தாலும் மகஜர் கையளிக்கும் மரபைக் கைவிடுங்கள். வந்தவர்களால் என்ன செய்ய முடியும்- அவர்களின் வருகையால் ஏதேனும் நன்மை கிடைக்குமா? மகஜர் கையளிப்பதன் பயன் என்ன?

இதுபோன்ற கேள்விகளை எழுப்பி அதற்கு கிடைக்கக்கூடிய நேர்த்தன்மையிலேயே முடிபுகள் எடுக்க வேண்டும். இதை விடுத்து மகஜர் கையளிப்பதையே தொழிலாகக்கொள்வது தமிழினத்தின் சிறப்பிற்கும் அறிவியலுக்கும் அழகுடையதல்ல.

வருகின்ற தூதுக்குழுவினர் காத்திரமான நடவடிக்கையெடுப்பவர்களாக இருந்தால் மட்டுமே அவர்களை கூட்டிச்செல்லுங்கள்.

எங்கள் துயரத்தை சர்வதேசத்திற்கு தெரியப்படுத்துமாறு அழுத்திக்கூறுங்கள். இங்கு நடக்கின்ற கொடூரங்களைப்பார்க்க வருகின்றவர்கள் அதனை பதிந்து வைப்பது மட்டுமன்றி, உலக நாடுகளுக்கும் தெரியப்படுத்தும் கடப்பாட்டுக்கு உட்பட்டவர்கள் என்ற உண்மையை உரக்கச் சொல்லுங்கள். இது காலத்தின் கட்டாய தேவை.

# சுமுகமான புறநிலையை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இன்னமும் அரசாங்கத்திடம் உள்ளது

## என்கிறார் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

வன்முறைகள் தணிந்த சுமுகமான புறநிலையைத் தோற்றுவிப்பதற்கான சந்தர்ப்பம், இன்னமும் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து கைநழுவிச் செல்லவில்லை என தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். சமகால நிலவரங்கள் குறித்து கருத்துரைத்திருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆலோசகரும் தத்துவா சிரியருமான



கலாநிதி அன்ரன் பாலசிங்கம் படையினரின் கொலை வெறியாட்டங்களையும், துணைக் குழுக்களின் வன்முறைகளையும் கட்டுப் படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அர சாங்கம் எடுப்பதற்கான கால அவகாசம் இன்ன மும் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அவா தொடர்ந்து கருத்துரைக்கையில், சமாதானத்திலும் பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்விலும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆழமான பற்றுறுதி கொண்டுள்ளனர். ரணில் விக்கிர மசிங்கவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களின் அத்தியாவசியமான மற்றும் அடிப்படைப் பிரச் சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு நாம் மேற்கொண்ட முயற்சிகள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இடையூறான பகைமையான கொள்கைகளால் கைகூடவில்லை.

போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக அமுல்படுத்துவதன் மூலம், சமாதானத்தையும் இயல்பு நிலையையும் நிலைப்படுத்த முடியும் என நம்பி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துடன் நாம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டோம். எனினும் எமது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக எமது போராளிகளின் நிலைகள் மீது படையினரின் பின்புல ஆதரவுடன், தமிழ் துணைப் படைக்குழுக்கள் வலிந்த தாக்குதல்களை தொடுத்தன. துணைப்படைக் குழுக்களின் வன்முறைகளை கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் இரட்டைவேட அணுகுமுறையையும் போலித்தனத்தையும் கையாண்டது. இதுவே, தற்போதைய துயரமான சூழலுக்கும் சமாதான முன்னெடுப்புகள் முடக்கம் கண்டமைக்கு காரணியாக அமைந்தது.

தென்தமிழீழத்தில், ஆயுதக்குழுக்களின் வன்முறைகள் தீவிரமடைந்த நிலையில், அது குறித்தும் சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஆராயும் நிமித்தமும் மத்திய குழுவைக் கூட்டுவதற்கு எமது தலைமைப்பீடம் விரும்பியது. எனினும் சமாதான முன்னெடுப்புக்களுடன் தொடர்புடைய எமது மத்திய குழுக்கூட்டத்தில் தென் தமிழீழத் தளபதிகன் கலந்துகொள்வதற்கு ஏதுவாக விமானப் படை உலங்கு வானூர்திகளை வழங்குவதற்கு அரசாங்கம் தவறியது. நட்புறவான மனோபாவத்தையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தும் வகையில் உலங்கு வானூர்தியை அரசாங்கம் வழங்கியிருந்தால் போர்ச்சூழல் தவிர்க்கப்பட்டு பேச்சுவார்த்தைகள் தொடர்ந்திருக்கக் கூடும்.

கடலில் பகைமை உணர்வைக்கொண்ட கடற்படையும் தரையில் துணைக் குழுக்களும் இயங்கும் போது கடல்-தரை வழிப்பயணங்களை எமது தளபதிகள் மேற்கொள்வது அபாயகரமானது. அத்துடன் தற்காப்பு நிமித்தம் எமது தளபதிகள் ஆயுதங்களை வைத்திருப்பதை ஏற்பதற்கு அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் தமிழ் ஆயுதக்குழுக்களின் வன்முறைகள் அதீதமாக தீவிரமடைந்துள்ளன. தென் தமிழீழத்தின் கருணாவின் ஆயுத தாரிகளும் யாழ்.குடாநாட்டில் ஈ.பி.டி.பி.ஆயுததாரிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளிகளையும் மக்களையும் இலக்குவைத்து வன்செயல்களை கட்டவிழ்த்து விட்டனர். பிரபல தமிழ் அரசியல் தலைவர்கள் சமூகப் பிரமுகர்கள், செய்தியாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பொதுமக்கள் எனப் பலர் கொடூரமான முறையில் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான படுகொலைகள் அனைத்தும் பெரும்பாலும் அரசாங்கக் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் பாதுகாப்புப்படைகளின் ஒத்துழைப்புடன் இடம்பெற்றுள்ளன.

பெப்ரவரி மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது தமிழ் துணைப்படைக்குழுக்களின் இருப்பு, இயக்கம், கட்டளைக் கட்டுமானம், தலைமைத்துவம், முகாம்களின் அமைவிடம் போன்றவற்றை உள்ளடக்கிய தகவல்களை அரசாங்கப் பேச்சுவார்த்தைக் குழுவிடம் நாம் சமர்ப்பித்ததோடு, போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அமைய ஆயுதக்குழுக்களை கட்டுப்படுத்துவதற்கான கடப்பாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிப்பீடம் நிறைவேற்றுவதற்கான உறுதி மொழியையும் எழுத்து மூலம் பெற்றுக்கொண்டோம்.

அதேபோன்று சமாதானத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்து பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸார் மீதான வன்முறைகள் நிகழ்வதை சகல வழிகளிலும் தடுப்பதற்கு நாம் இணங்கினோம். எனினும் எமது நம்பிக்கையை முற்றாகச் சிதைக்கும் வகையில் துணைப்படைக் குழுக்களை நிராயுதபாணிகளாகத் தவறிய அரசாங்கம், அவை அரசாங்கக் கட்டுப்பாட்டுப்பகுதியிகளில் இயங்குவதையும் ஒப்புக்கொள்ள மறுத்தது. மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் படைகளின் பின்புல ஆதரவுடன் எமது நிலைகளை துணை ஒட்டுக்குழுக்கள் தாக்கி எமது தரப்பில் இழப்புக்களை ஏற்படுத்தினர். இவற்றின் தொடர்ச்சியாக மட்டக்களப்பிலும் யாழ்.குடாநாட்டிலும் தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். கடந்த ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி படைகளின் ஆதரவுடன் துணைப்படைக்குழுக்களால் பிரபல தமிழ் அரசியல் தலைவரான விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டமை வன்முறைகள் தீவிரமடைந்ததிலும் பதில் வன்முறைகள் வெடித்தமைக்கும் திருப்பு முனையாக அமைந்தது.

படைகள் மீதான தாக்குதல்களுடன் நாம் தொடர்புபடவில்லை. என்பதை வன்னியில் உள்ள எமது பொறுப்பாளர்கள் பல தடவைகள் தெளிவுபடுத்தியுள்ளனர். படைகளின் ஆக்கிரமிப்பாலும் ஒடுக்குமுறைகளாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சமூகத்தில் இருந்து தலைமறைவான ஒரு எதிர்ப்பியக்கம் உருவாக்கம் பெற்று படைகளின் மீது மறைமுகத் தாக்குதல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இந்த எதிர்ப்பியக்கத்தின் தோற்றத்தையும் செயற்பாட்டையும் ஆயுதப் படைகளால் புரிந்துகொள்ள முடியவில்லை எனவே எம்மீது தொடுக்கப்பட்ட வன்முறைக்கு பதிலடியாக கூட்டுத்தண்டனை விதிக்கும் நோக்கத்துடன் பெருந்தொகையில் அப்பாவிப் பொது மக்களை படைகள் படுகொலை செய்து வருவதோடு வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இருந்த போதும் இனக்கலவரங்களை தூண்டுவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் முற்படுவதாக அரசாங்கம் கூறுவது மிகவும் மோசமான அபத்தனமான கூற்றாகும். இதேபோன்ற குற்றச்சாட்டையே 1983 யூலை இனப் படுகொலைகளின் பின்னரும் அரசாங்கம் முன்வைத்தது.

கடந்த காலத்தில் பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் செம்மையாகவும் சந்தேகத்திற்கிடமின்றி நடுநிலைமையுடனும் செயலாற்றிய கண்காணிப்புக்குழு, தற்போது முதிர்ச்சியற்ற தன்மையுடன் எமது கடற்சுதந்திரம் குறித்து கருத்துரைப்பது எம்மை கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. மிகவும் சக்திவாய்ந்த கடற்படையொன்றை தமிழீழ விடுதலைப்புலிகள் கொண்டிருப்பது மறுக்கமுடியாத உண்மை. அத்தோடு அது நடைமுறையில் உள்ள ஜதார்த்தமுமாகும். கடந்த யுத்த காலங்களில் படைக்கு எதிரான கடல் தரை வழிச் சமர்களில் முக்கிய பங்கை கடற் புலிகள் வகித்த தோடு கடற்படைக்கு பாரிய அச்சுறுத்த லாகவும் அமைந்தனர்.

இருந்தபோதும் கடற்புலிகளின் சுதந்திர நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தும் விதிகள் எதுவும் போர்நிறுத்த உடன்படிக்கையில் இருக்கவில்லை. விடுதலைப்புலிகளின் கடல் நடமாட்ட சுதந்திரம் குறித்து எமது விடுதலை இயக்கத்திற்கும் கண்காணிப்புக்குழுவிற்கும் இடையில் தொடர்ச்சியாக நீண்டகாலமாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்துள்ளன. என்பது குறிப்பிடத்தக்கது.

அப்பாவிப் பொதுமக்கள் நீதிக்குப் புறம்பான முறையில் படுகொலை செய்யப்படும் சம்பவங்களுடன் அரசாங்கப் படைகள் தொடர்பு பட்டுள்ளமைகுறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் இருந்து கண்காணிப்புக்குழு பின்வாங்கியமை எம்மை ஆழ்ந்த அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. பொது மக்களின் உயிர் வாழ்வை தீர்மானிக்கும் பெரும் பொறுப்பை கொண்டுள்ள அனைத்துலக நிறுவனம் ஒன்று வெட்கித் தலைகுனியும் வகையில் அரசாங்கத்தின் அழுத்தத்திற்கு அடிபணிந்து பின்வாங்கியமை எதிர்மாறான விளைவுகளுக்கு வழிகோலினயுள்ளது.

கண்காணிப்புக்குழுவின் பின்வாங்கலும் அனைத்துலக சமூகத்தின் மௌனமும் நீதிக்குப்புறம்பான முறையில், வகைதொகையின்றி அப்பாவி தமிழ் பொது மக்கள் பாதுகாப்புப்படைகளால் படுகொலை செய்யப்படுவதை ஊக்குவித்து படுகொலைகள் குறித்து மௌனம் சாதித்த அனைத்துலக சமூகம் ஸ்ரீலங்கா அரசாங்கம் பொறுமையைப் பேணுவதாகக்கூறி பாராட்டுத் தெரிவித்தது.

தற்போது நிலவும் சூழலை நான்காவது ஈழப்போரின் ஆரம்பம் எனக்கூற முடியாது மாறாக தீவிர யுத்தம் ஒன்றுக்கு வழிகோலக்கூடிய மென்தீவிர யுத்தம் என்றே கூறமுடியும் கருணாவின் சதியை வெற்றிகரமாக முறியடித்து மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட நிலப்பிரதேசங்களை எமது இயக்கம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது.

ஆனால் இவ்விவகாரத்தில் அரசாங்கம் குறுக்கிட்டு விடுதலைப்புலிகளுடன் போர் புரிவதற்கு ஏதுவாக கருணா குழுவினரை ஒரு துணைப்படையாக உருவாக்குவதற்கு சகல வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்தது விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டு தென் தமிழீழத்தின் இயல்புநிலையை சீர்குலைப்பதற்கான நாசகார சக்தியாக கருணாவை அரசாங்கம் பயன்படுத்தி வருகிறது. அரசாங்கத்தின் மறைமுக தந்தி ரோபாயம் நாட்டை அழிவின் விழிம்பிற்குக் கொண்டு வந்துள்ளது.

இவ்வாறு குறிப்பிட்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அவசர பிரச்சினைகளை கையாள்வதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை உரிய முறையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயன் படுத்த தவறியமை தமிழீழ விடுதலைப் புலிகளை பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாகி இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். (கு)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



உயிர்களைக் கர்ம வினைகளில் இருந்து விடுவித்து இறைவன் தன் திருவடிகளில் சேர்த்துக்கொள்வதே முக்தி. முக்தி நிலையில் பெறும இன்பம் பெரும் பேரின்பம்.

# இளைஞன் மீது துப்பாக்கிச்சூடு

(யாழ்ப்பாணம்)

கோவிலுக்குச் சென்று விட்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்த இளைஞனை வழிமறித்த இனந்தெரியாத சிலர் அவ் இளைஞன் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சுன்னாகத்தில் நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சுன்னாகம் கிழக்கு கம்பன் குளத்தைச் சேர்ந்த வில்வராசா ரதீஸ்வரன் (வயது24) என்ற இளைஞன் காயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ தினத்தன்று குறித்த இளைஞன் சுன்னாகம் சிவன் ஆலயத்திற்குச் சென்று விட்டு வீடுதிரும்பிக்கொண்டிருக்கையில் அவரை மறித்த இனந்தெரியாத சிலர் அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரிக்க முயன்றுள்ளனர்.

அதனைத் தடுக்க முற்பட்ட இளைஞனை தாக்கியுமுள்ளனர். இதனையடுத்து குறித்த இளைஞனும் அவர்களைத் தாக்க முயன்ற போது அவர்களில் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுவிட்டு வந்தவர்களுடன் தப்பிச்சென்றதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. (ச-15)

# கைதான ஈழ அகதிகள் நீதிமன்றால் விடுதலை

(மன்னார்)

திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து பாதுகாப்புத் தேடி மன்னார் பேசாலையூடாக இரண்டு படகுகளில் இந்தியாவுக்கு கடல் வழியாகச் சென்றபோது தலைமன்னார் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 17 தமிழ் அகதிகளை மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் அவர்களின் சொந்த இடங்களுக்கு அவர்களை அனுப்பிவைக்குமாறு சிவில் அதிகாரிகளுக்கு நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்ட இந்த 17 அகதிகளுடன் இவர்களை ஏற்றிச் சென்றதாக தெரிவிக்கப்படும் படகோட்டிகளையும் மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தபோது படகோட்டிகளை 15 ரூபா ஆட்பிணையில் செல்வதற்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை வாசிகளான 77 குடும்பங்களைச் சேர்ந்த 300 அகதிகள் மன்னார் பேசாலை வெற்றிநாயகி அன்னை ஆலயத்திலும், தலைமன்னார் தேவாலயத்திலும் கடந்த சில தினங்களாக தஞ்சமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளன. (ச-05)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இரும்பு பெட்டகத்துக்குரிய இரு சாவிகள் வீதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டு இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மேற் தரக் கிளை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர்கள் தகுந் த ஆதாரங்களை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறும் வங்கி முகாமையாளர் ந.சிவரத்தினம் கேட்டுள்ளார். (க)

# பவள் வாகனம் தடம்புரண்டது

புன்னாலைக்கட்டுவனில் இராணுவத்தின் பவள் வாகனம் ஒன்று தடம்புரண்டது. நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வாகனத்தில் பயணம் செய்த படையினருக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தீவகம்,மண்கும்பான் பகுதியில் கடற்படையின் ட்டிரக் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வயலுக்குள் பாய்ந்து புதையுண்டது. நேற்று முன்தினம் புதையுண்ட ட்டிரக் நேற்றுக்காலையேமீட்கப்பட்டது.(ச-05,15)


PEOPLE'S BANK

## மக்கள் வங்கி அறிவித்தல்

## மீட்கப்படாத நகைகள் பகிரங்க ஏல விற்பனை

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.2004 ற்கு முன்னர் அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் மக்கள் வங்கி,யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையில் கடந்த வைகாசி மாதம் 12-ம் , 13-ம் 14-ம், 15-ம், 16-ம் திகதிகளிலும் நெல்லியடிக்கிளையில் 14-ம் திகதியும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவிருந்தது. தற்போது இவ் பிற்போடப்பட்ட ஏல விற்பனை பின்வரும் திகதிகளில் நடாத்தப்படும்.

| திகதி | ஏல விற்பனை நடைபெறும் இடம் |
|---|---|
| 03-06-2006-சனி | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை |
| 04-06-2006-ஞாயிறு | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை |
| 05-06-2006-திங்கள் | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை |
| 10-06-2006 சனி | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை |
| 11-06-2006-ஞாயிறு | நெல்லியடிக்கிளை |

வங்கிக்கிளைகள்:

யாழ்.ஸ்ரான்லி வீதி ,காங்கேசன்துறைக்கிளை , யாழ். பிரதான வீதி, நெல்லியடி,அச்சுவேலி , சங்கானை ,சுன்னாகம் ,சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக் கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை மற்றும் நீடித்த கருமபீடங்களான மானிப்பாய், உரும்பிராய் ,மல்லாகம் ,திருநெல்வேலி ,இணுவில்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

(C-328)


# வெள்ளைவானில் வந்தோரால் மூன்று மாணவர்கள் கடத்தல்

வாழைச்சேனை பேத்தாளையில் வெள்ளைவானில் வந்தவர்களால் மூன்று மாணவர்கள் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் கொழும்பு வீதியில் உள்ள இராணுவ முகாம் அருகே இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

உணவகம் ஒன்றில் 6மாணவர்கள் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தபோது வெள்ளைவானில் வந்தவர்கள் இவர்களை கடத்தியதாகவும் அவர்களில் மூவர் தப்பியோடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று மாணவர்களின் முதுகிலும் துப்பாக்கியை வைத்து அழுத்தி வாகனத்தில் ஏற்றிச் சென்றவர்கள் இராணுவ முகாம் அருகே இறக்கிவிட்டுள்ளனர்.

இதேவேளை இந்திய புடைவை வியாபாரி ஒருவரை காணவில்லை என்று மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தம்பிச்செட்டியார் தாதகுமார் என்ற குறித்த புடைவை வியாபாரி காணாமல் போயிருப்பதாக அவருடன் சேர்ந்து புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட சக இந்திய வியாபாரி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ச-05)

## மட்டு.செங்கலடியில் இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி வேதியார் கிராமத்தில் இளைஞர் ஒருவர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 5 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இந்த இளைஞர் கொல்லப்பட்டார்.

இவரது சடலம் அடையாளம் காணும் பொருட்டு ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-5)

# பரீட்சை

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட, நுண்கலைப்பீடபரீட்சைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக கலைப்பீடாதிபதி தெரிவித்துள்ளார். பணிப்புறக்கணிப்பு காரணமாக தடைப்பட்டிருந்த பரீட்சைகள் யாவும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இது தொடர்பாக சகல மாணவர்களையும் அவ்வப் பீடாதிபதிகளுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (க-132,133)

## சமாதானப் பேச்சுக்கள்...

இலங்கைக்கு நாளை மறுதினம் வரவிருக்கும் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கையின் சமாதான தூதுவருமான எரிக்சொல் ஹெய்மின் வருகை மற்றும் தற்போது நடைபெற்று வரும் வன்முறைகள் குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பின் பின்னர் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தார்.

இதன்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் பயனுள்ள விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இது போன்று அரசாங்கத்தினருடனும் பல பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் பிறட்ஸ்கர் கூறினார். இதேவேளை கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல் நோர்வேயில் நடைபெற்று வருகின்றது.

கண்காணிப்புக்குழுவினரின் பாதுகாப்பு குறித்தும் தாம் கலந்துரையாடியதாகவும் அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டுமென இரு தரப்பிடமும் தாம் வலியுறுத்தியிருப்பதாகவும் ஹான்ஸ் பிறட்ஸ்கர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் பயங்கர வாதப்பட்டியலில் சேர்க்கவுள்ளமை தொடர்பாகவும் இந்த சந்திப்பில் கலந்துரையாடியதாகவும் பிறட்ஸ்கர் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியமும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிபு செய்யவேண்டும். அது குறித்து தற்போது எதுவும் கூற முடியாது என பிறட்ஸ்கர் கூறினார்.

அண்மைக்காலமாக வடக்கு கிழக்கில் மோசமான பல வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. இராணுவத்தளபதி சரத்பொன்சேகா மீது கொலை முயற்சி ,யாழ்ப்பாணத்தில் பத்திரிகை நிறுவனம் தாக்கப்பட்டது, யாழ்ப்பாணத்தில் பல பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை,விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாணத் துணைத்தளபதி ரமணன் கொலை செய்யப்பட்டமை என பல வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

இவற்றை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார். சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இரு தரப்பினரும் உடனடியாகச் செயற்படவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். (ச-05)

# துப்பாக்கிச்சூட்டில் இராணுவச் சிப்பாய் பலி

(வவுனியா)

வவுனியா ஓமந்தை பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் உள்ள இராணுவக் காவலரண் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 3.25 மணியளவில் இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக இராணுவப்பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். (க)

## தலைவர்...

தலைவர் வே.பிரபாகரனை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடுவது குறித்து விருப்பம் தெரிவித்ததாகவும் மதகுருமார் விளக்கியுள்ளனர். (ச-5)

## இராணுவ...

வருடகால போர்நிறுத் தம் நிலவியதால் அவர்கள் மத்தியில் மனிதருக்கிடையில் இருக்கக் கூடிய உறவுகள் இருந்திருக் கலாம். அந்த உறவுகள் இப்போதும் தொடர்கிறதா என்று தெரியவில்லை.

ஒரு வேளை அப்படியிருக்கலாம் என்று எமக்கும் சந்தேகங்கள் உண்டு. கருணாவின் ஆட்களுடன் முன்பு கொண்டிருந்த உறவுகளை இராணுவத்தின் கீழ் மட்ட படைவீரர்கள் முறித்துக் கொண் டனர் என்பதை உறுதி செய்வது இலகுவான விடயம் அல்ல.

எவ்வாறாயினும் அரச படையினரிடம் இருந்து ஆயுதக் குழுக்கள் எவ்வகை உதவிகள் ஒத்தாசைகளையும் பெறுவதற்கு அனுமதிப்பதில்லை என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின் றது.

இவ்வாறான விடயங்கள் எந்த இராணுவத்திலும் இருப்பது தான் என்றாலும் இந்தச் செய்திகள் கீழ்மட்டங்களை சென்றடை வதற்கு சிலகாலம் தேவைப்படும்.

எனினும் கருணா குழுவுக்கு உதவுபவர்கள் எவரேனும் கண்டு பிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும். இவ்வாறு சமாதான செயலகப்பணிப்பாளர் பாலித கோகன்ன மேலும் தெரிவித்துள்ளார். (ச-5,6)


நிறைஞ்சனாஸ்
சங்கானை
விஜய்,சங்கவி நடித்த
கொயம்புத்தூர் மாப்பிள்ளை
கா.நே: 10.30,2.15,5.30,8.45

ராஜா தியேட்டர் சினிமா யாழ்ப்பாணம்
04.05.2006 முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்ஷன்
கிங்கொங்
(KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 24.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.